(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 102.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, யூலை 06, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0687/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் மொத்த மின் உற்பத்தியின் அளவையும் அதில் நீர் மின்சாரம் மற்றும் அனல் மின்சாரத்தின் நூற்றுவீதத்தையும்;

(ii) இலங்கை மின்சார சபை (இ.மி.ச) மற்றும் தனியார் துறை ஆகியவற்றினால் உற்பத்தி செய்யப்படும் அனல் மின்சாரத்தின் அளவையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(ஆ) (i) தவணைக் கொடுப்பனவு, வட்டிக் கட்டணங்கள் மற்றும் கடன் மீள்கொடுப்பனவுகள் ஆகியவை அடங்கலாக இ.மி.ச. இற்கு ஏற்படும் மின்சார உற்பத்திச் செலவையும்;

(ii) உற்பத்தி செய்யப்படும் அனல் மின்சாரத்தின் அலகுப் பெறுமதியையும் அதனை தனியார் துறை இ.மி.ச.வுக்கு வழங்குவதற்காக செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் காலப்பகுதியையும்;

(iii) அனல் மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும்போது கொடுப்பனவை மேற்கொள்ளத் தவறுதல் பற்றி ஏதேனும் வாசகம் அந்த உடன்படிக்கையில் உள்ளதா என்பதையும்;

(iv) சூரிய வலு மற்றும் காற்று வலுவை அடிப்படையாகக் கொண்ட ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாடுகள் உள்ளனவா என்பதையும்;

(v) அத்தகைய செயற்பாடுகள் இல்லையெனில், புதுப்பிக்கக்கூடிய அந்த சக்தி மூலங்களை பயன்படுத்தாமைக்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) அரச துறையினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்;

(ii) தனியார் துறையிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் மின்சாரம்;

(iii) வர்த்தகத் துறைக்கும் வீட்டுப் பாவனையாளர்களுக்கும் விற்பனை செய்யப்படும் மின்சாரம்

ஆகியவற்றின் அலகொன்றுக்கான சராசரி விலையை அவர் வெவ்வேறாக இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0833/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்கள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) விமான நிலையத்தில் கடமைபுரியும் மேற்படி ஊழியர்கள் பூர்த்தி செய்யவேண்டியுள்ள தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கடமைகளின் பொருட்டு மேற்படி திணைக்களத்தைச் சாராத வெளி ஆட்கள் அமர்த்தப்பட்டுள்ளார்களா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) மேற்படி ஆட்களின் தகைமைகள் யாவையென்பதையும்,

(iv) அவ்வாறானவர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1050/ '10

3.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய கண்டி மாவட்டத்தின் கட்டுகஸ்தொட்டை, கம்பளை, தெல்தெனியா, வத்தேகம, தெனுவர மற்றும் கண்டி ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 61 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1166/ '11

4.

கௌரவ அநுர திசாநாயக்க,— கமத்தொழில் சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசின் உர மானிய வேலைத்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தின் மொத்த உர விநியோகஸ்தராக கமத்தொழில், கமநலப் பயிர்ச் செய்கையாளர்களின் அமைப்பு செயற்படுகின்றதா என்பதையும்;

(ii) அந்த அமைப்பு உர விநியோகத்தை ஆரம்பித்த வருடம் எது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 வரை மேற்கூறிய மொத்த விநியோகஸ்தருக்கு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் உரக் கம்பனியினால் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு உர வகைகளின் அளவு வருடாந்தம் எவ்வளவு;

(ii) 2009 ஆம் ஆண்டளவில் மேற்படி மொத்த விநியோக்ஸ்தரினால் கமநலச் சேவைகள் நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு உர வகைகளினதும் அளவு எவ்வளவு

என்பதை அவர் வெவ்வேறாக சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி விநியோகஸ்தருக்கு கிடைத்த உரத்தின் அளவுக்கும் விநியோகிக்கப்பட்ட அளவுக்கும் இடையில் ஒப்பீட்டளவில் கையிருப்புத் தொகையில் பற்றாக்குறை காணப்படின் அது எவ்வளவு;

(ii) ஒரு மெற்றிக் தொன் உரத்தின் சந்தைப் பெறுமதிக்கமைய பற்றாக்குறையாக உள்ள அந்த கையிருப்புத் தொகையின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்கூறிய நிலமைகளினால் அரசுக்கும் விவசாயிகளுக்கும் நட்டம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்கூறிய விநியோக்ஸ்த்தர் மோசடி செய்துள்ளாரென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

1212/ '11

5.

கௌரவ வை.ஜீ. பத்மசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்தற்கு,— (1)

(அ) (i) ருவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க மத்திய மருந்தகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையுதம்;

(iii) புதிதாக மத்திய மருந்தகங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இடங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போதுள்ள மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மத்திய மருந்தகங்களுக்கு மேலதிகமாக ருவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் காணப்படுகின்ற தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக தாபிக்கப்பட வேண்டிய மத்திய மருந்தகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) மத்திய மருந்தகமொன்று தாபிக்கப்படும் போது அமைச்சினால் கருத்திற் கொள்ளப்படுகின்ற அளவுகோல்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1215/ '11

6\.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சனாதிபதி நிதியத்துக்கு எவ்வாறு நிதி உதவிகள் கிடைக்கின்றன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில்,

(i) சனாதிபதி நிதியத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த நிதியத்தினால் வழங்கப்பட்ட மொத்த நிதி உதவி எவ்வளவென்பதையும்;

(iii) சனாதிபதி நிதியத்தினால் உதவிகள் வழங்கப்படும் துறைகள் மற்றும் ஒவ்வொரு துறைக்காக வழங்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(iv) நிதி உதவிகள் வழங்கப்பட்டவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1302/ '11

7\.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை வங்கிக்குச் சொந்தமான 65-1990, 32-7394, 32-7393 மற்றும் 65-1986 ஆம் இலக்கங்களையுடைய நான்கு வாகனங்கள், ஒரு வாகனத்திற்கு மாதாந்தம் ரூபா.25000/ - வீத வாடகை அடிப்படையில் நிதி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வாகனங்களுக்கு ஏற்புடைய வாடகைத் தொகை 2009.10.09 ஆம் திகதியிலிருந்து இன்றுவரை நிதி அமைச்சினால் இலங்கை வங்கிக்கு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விபத்திற்குள்ளாகியுள்ள 65-1986 ஆம் இலக்க வாகனத்திற்கான இழப்பீட்டுத் தொகை இலங்கை வங்கிக்குச் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், செலுத்தப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 65-1990 மற்றும் 32-7393 ஆம் இலக்க வாகனங்கள் இரண்டினையும் மீண்டும் இலங்கை வங்கியிடம் கையளிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதயும்;

(ii) அவ்வாறாயின், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0721/ '10

8\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் கருத்திட்டங்கள் அமைந்துள்ள இடங்களையும்;

(ii) அவ்வாறான ஒரு பிரிவு களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அவ்வமைவிடத்தின் பெயரினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கணக்காய்வாளர் நாயகம் ஆய்வுக்குட்படுத்திய, பிணைச் சொத்துக்கள் இல்லாத, 2000ம் ஆண்டின் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் செலவு 700-800 மில்லியனா என்பதையும்;

(ii) அவ்வாறில்லையெனின், மேற்குறிப்பிடப்பட்ட வருடத்தில் ஆராய்ச்சிக்கு ஏற்பட்ட செலவின் சரியான தொகையினையும்;

(iii) இலஞ்சம் அல்லது ஊழலை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவிற்கு இவ்விடயம் ஆற்றுப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் விசாரணையின் பெறுபேற்றினையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட போது செலவழிப்பதற்கு இவ்வளவு பணத்தினைக் கொண்டிராத இந்த நிறுவனத்திற்கு, பணம் எந்த மூலத்திலிருந்து வழங்கப்பட்டதென்பதை அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0966/ '10

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வரையறுக்கப்பட்ட இலங்கை சலுசல நிறுவனத்தின் தற்போதைய தலைவரை நியமித்த அதிகாரியின் பெயர் யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி தலைவரின்,

(i) முழுப் பெயர் மற்றும் வயது;

(ii) கல்வித் தகைமைகள்;

(iii) முன்னர் பணிபுரிந்த இடம்,பதவி மற்றும் தொழில் அனுபவம்;

(iv) தற்போதைய மாதாந்தச் சம்பளம் மற்றும் கிடைக்கின்ற ஏனைய கொடுப்பனவுகள்

யாவையென்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1213/ '11

10.

கௌரவ வை.ஜீ. பத்மசிறி,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதுள்ள முன்பள்ளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி முன்பள்ளிகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) முன்பள்ளிக் கல்வியைப் பெறுவதற்காக ஒரு வருடத்தில் சராசரியாக அனுமதிக்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் முன்பள்ளிகளையும் முன்பள்ளி ஆசிரியர்களையும் பதிவு செய்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் முறைமையியல் பின்பற்றப்படுகின்றதா என்பதையும்;

(ii) முன்பள்ளி ஆசிரிய பயிற்சிக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மட்டத்திலான பயிற்சிப் பாடநெறியெதுவும் உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1216/ '11

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியை முன்னிட்டு சுதேச மருத்தவத்துறை அமைச்சு செலவிட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களங்களினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) குறித்த திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவுசெய்த பணத் தொகை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவுகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்த அமைச்சின் செலவுத் தலைப்பு யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1303/ '11

12.

கௌரவ எம் ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மரபுரிமையாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கட்டிடத்தை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அக்கட்டிடத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் தலைநகர கிளை அலுவலகமும் வேறு வங்கிப் பிரிவுகளும் அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுமா என்பதையும்;

(iii) தற்போது யோர்க் வீதி இலங்கை வங்கிக் கட்டிடத்தில் அமைந்துள்ள அவ்வங்கிக்கு சொந்தமான ஜீ. ஓ. எச். ஹோட்டல் நட்டத்தில் இயங்கிவருகிறதா என்பதையும்;

(iv) அந்நிலைமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0722/ '10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (I) முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 17 இன் கீழ் 2009. 01. 01 ஆம் திகதி முதல் இற்றைவரை, முதலீட்டுச்சபையுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட அரச தொழில்முயற்சிகளினதும் கம்பனிகளினதும் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும் பிரிவு அடிப்படையிலும்;

(II) இற்றைவரை வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள மேற்குறிப்பிட்ட (அ) (1) இல் குறிப்பிடப்பட்ட தொழில்முயற்சிகளின் எண்ணிக்கையையும்;

(III) மேற்படி (அ)(i) இன் பிரகாரம் செய்யப்பட்டுள்ள முதலீட்டின் பெறுமானத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (I) மேற்சொன்ன கம்பனிகள் அனுபவிக்கும் வரி விடுமுறை காலத்தையும்;

(II) 01.01.2006 தொடக்கம் 31.12.2008 வரையுமான காலப்பகுதியில் பதிவு செய்து நடவடிக்கைகளை ஆரம்பித்த கம்பனிகளின் எண்ணிக்கையை, வருடாந்த அடிப்படையிலும் முதலீட்டுச் சபை பிரிவு அடிப்படையிலும்,

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

0984/ '10

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வில்பத்து சரணாலயத்தில் மணல் அகழ்வு இடம் பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதற்காக வனப் பாதுகாப்பு திணைக்களத்தினூடாக வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அந்த உரிமப் பத்திரத்தை வழங்கிய அதிகாரி யார் என்பதையும்;

(iv) அந்த உரிமப் பத்திரம் மூலம் மணல் அகழ்வதற்கு அனுமதி பெற்றுள்ள நபர் அல்லது நபர்கள் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த சரணாலயத்திலிருந்து இதுவரை அகற்றப்பட்டுள்ள மணலின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த மணல் எந்தப் பணிகளுக்காக எடுத்துச் செல்லப்படுகின்றது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1304/ '11

15.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 சனவரி மாதம் 02ஆம் திகதி முதல் திசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் இலங்கை வங்கிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறு ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒருவருக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேலேயுள்ளவாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆலோசகர்களின் பெயர்களும் விலாசங்களும் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"ஜயவிக்கிரம மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— குறைநிரப்பும் தொகை - தலைப்பு 103, நிகழ்ச்சித் திட்டம் 1,— †2011 சனவரி மாதம் 1 ஆம் திகதியுடன் ஆரம்பமாகி, 2011 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டின் சேவைக்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியித்தினால் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வேறு ஏதேனுமொரு நிதியத்தினால் அல்லது பணத்தினால் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கு உகந்ததைச் செய்யக் கூடியதானவொரு தொகையினால் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் பெற்றுக் கொள்ளும் ஏதேனுமொரு கடன் தொகையினால் ரூபா இருபது பில்லியனுக்கு (ருபா. 20,000,000,000) மேற்படாத குறைநிரப்புத் தொகையினைக் கொடுக்க வேண்டியதுடன் அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு | 103 | - | பாதுகாப்பு அமைச்சு |
| நிகழ்ச்சித் திட்டம் | 1 | - | தொழிற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் |
| கருத்திட்டம் | 2 | - | அமைச்சு நிருவாகமும் நிறுவன சேவைகளும் |

| | | |
|---|---|---|
| ஆக்கப் பொருட் செலவினம் | ரூ. | 20,000,000,000 |
| மொத்தச் செலவினம் | ரூ. | 20,000,000,000 |
| (இருபது பில்லியன் ரூபா மட்டும்) | | |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2011, யூன் மாதம் 23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

* 2.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 3.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 4.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 10.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 11.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம்

திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

நீதி அமைச்சர்,— கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம், 10 ஆம் பிரிவுகளின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 சனவரி 21 ஆம் திகதிய 1689/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.06.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

17.

அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை

18.

பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0175/ '10

1\.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தங்கல்ல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு/நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0668/ '10

2\.

கௌரவ அநுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 5 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு வருடத்திலும்,

(i) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா, சீனி, பழங்கள், பலசரக்கு பொருட்கள் உள்ளிட்ட அனைத்து உணவுப் பொருட்களினதும் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி பொருட்கள் எந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்,

(iii) இவற்றை இந்நாட்டினுள் இறக்குமதி செய்த நிறுவனங்கள் மற்றும் நபர்கள் யாவர் என்பதையும்,

(iv) இந்நாட்டில் தரையிறக்கிய போது ஒவ்வொரு உணவுப் பொருளினதும் பெறுமதி யாதென்பதையும்

தனித்தனியே அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0176/ '10

3.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பெலியத்த பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங் களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0858/ '10

4.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மேல், சப்பிரகமுவா, வடமேல், மத்திய, ஊவா, வடமத்திய, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் மத்திய அரசு மற்றும் மாகாண சபைக்குரிய பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்பட இருக்கின்றதா என்பதை அவர் ஒவ்வொரு மாகாணத்துக்கும் அமைய வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அல்லது நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்பட இருப்பின் 2010.01.01 ஆந் திகதியாகும் போது, அந்தந்த மகாகாண அடிப்படையில் ஆசிரியர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைப் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி நிலுவசைச் சம்பளத்தை செலுத்துவதற்கு அரசினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறு ஒதுக்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) நிலுவைச் சம்பளங்கள் செலுத்தாமையினால் மேற்படி ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ள தென்பதையும்,

(ii) அவ்வாறாயின், மேற்படி ஆசிரியர்களுக்கு எத்தினத்தில் நிலுவைச் சம்பளம் செலுத்தப்படும் என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0974/ '10

5.

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 - 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வெளிநாடுகளில் தொழில்புரிந்த இலங்கையர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாடு மற்றும் தொழில் துறையின்படி வருடாந்த அடிப்படையில் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 – 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டுத் தொழில்புரிவோர் இலங்கைக்கு ஈட்டிக்கொடுத்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(ii) இவ்வருமானம் மொத்த அரசிறையின் சதவீதமாக எவ்வளவென்பதையும்

வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0975/ '10

6.

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு, வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்றைப் பதிவு செய்ய வேண்டிய அரச நிறுவனம் யாது என்பதையும்,

(ii) இவ்வாறு பதிவு செய்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் யாவை என்பதையும்,

(iii) இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள வெளநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதிவு செய்யப்படாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் அடையாளங் காணப்பட்டிருப்பின் அந்நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை என்பதையும்,

(ii) இவ்வாறான முகவர் நிலையங்கள் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் இனிமேல் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(iii) 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டிருப்பினும் பிற்காலத்தில் அடிப்படை நிபந்தனைகளை மீறியதால் பதிவு இரத்து செய்யப்பட்ட அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்நாட்டில் செயற்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உப முகவர் நிலையங்கள் உள்ளனவா என்பதையும்,

(ii) இவ்வாறான நிலையங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் பதிவுசெய்யப்பட வேண்டுமா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அதற்குரிய நிபந்தனைகள் யாவை என்பதையும்,

(iv) அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள உப முகவர் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?